9th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது காண்டீன் இருக்கும் இடத்தில் கட்டலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

DR. A. SREENIVASAN : ஐயா, இந்தக் கட்டிடத்தை இப்போதுள்ள இடத்திலிருந்து புதிதாகப் பெரிய கட்டிடத்திற்கு மாற்றவேண்டும் என்று சொல்வதனால் பெரிய கட்டிடத்தில் இருந்தால் தான் இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கும் இந்த சபைக்கும் பெரிய கவுரவம் இருக்கும் என்று இந்த அரசாங்கம் நினைக்கின்றதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் எப்படி நினைக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் வேண்டுமானால் அவ்விதம் நினைத்துக்கொண்டிருக்கலாம். அரசாங்கத்திற்கு அவ்விதமான எண்ணமும் கிடையாது. இந்த சபை நடவடிக்கைகள் வசதியாக நடப்பதற்கும், இந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் வசதியாக உட்காருவதற்கும், மற்றவர்கள் வந்து இந்த சபை நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கும் சௌகரியமாக இருக்கவேண்டும் என்று நினைத்துத்தான் வேறு கட்டிடம் கட்டவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

DR. A. SREENIVASAN : இப்போதுள்ள கட்டிடம் மிக அசௌகரியமாக இருக்கிறது, அல்லது இடம் போதவில்லை என்று யாராவது புகார் அனுப்பியிருக்கிறார்களா? இப்போதுள்ள இடமே சௌகரியமாக இருக்கிறது என்பது என் போன்றவர்களின் அபிப்பிராயம். இவ்விதமிருக்கும்போது வேறு இடத்திற்கு மாற்றுவதின் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிற கருத்து இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களின் கருத்து என்றிருக்குமானால், வேறு இடத்திற்கு மாற்றுவதை நிறுத்திவிடலாம்.

SRI V. V. RAMASWAMI : கவர்னர் அவர்கள், அசெம்பிளி ஸ்பீக்கர் அவர்கள் முதலியோர் வந்திருந்து இந்த சபை நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்கு சௌகரியமில்லை என்பது உண்மைதானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அஸெம்பிளி ஸ்பீக்கர் இங்கு வர விரும்பியதாக எனக்குத் தெரியவில்லை.

VIDWAN T. MUTHUKANNAPPAN : இப்போதிருக்கும் அந்தக் கட்டிடத்தை (canteen building) இடித்துக் கட்டப்போகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம்.

Police firing in front of the Harbour on 16th June 1958

* 2 *Q*.—SRI S. T. ADITYAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of workers who went on strike in the recent Port and Dock Workers' strike at Madras;

(*b*) the number of rounds fired by the Police during the disturbances in front of the Harbour on 16th June 1958;

(*c*) the number of persons killed and injured;

(*d*) whether any claims for compensation have been preferred in respect of persons killed and injured; and

(*e*) if so, the action taken thereon?

[9th September 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) About twelve thousand.

(*b*) Twenty.

(*c*) Six persons lost their lives and twenty persons received gun shot injuries.

(*d*) & (*e*) No, Sir.

SRI S. T. ADITYAN : இந்தமாதிரிச் சுடுவதற்கு முன்னால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்னென்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சுடுவது என்பது கடைசி முறையாகும். அதற்கு முன் லத்தி சார்ஜ், டியர் காஸ் முதலியவைகள் பிரயோகிக்கப்படும். அவைகளாலும் பயனின்றி கூட்டத்தினர் மேற்கொண்டு பலாத்காரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தால் வேறு வழியில்லாமையினால் சுடுவதைப் பிரயோகிக்கிறார்கள்.

DR. V. K. JOHN : Do the Government propose to publish the report of the Investigation Officer?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Government have been examining the question whether the report may be published because the question of *sub judice* is there.

SRI MOHAMED RAZA KHAN : Sir, why was not a judicial officer appointed to investigate into this matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may inform the hon. Member that the Chief Presidency Magistrate is also a judicial officer.

SRI MOHAMED RAZA KHAN : May I make it clear that for such serious things, it has always been the practice for the Government to appoint a Judge of the High Court to enquire into the matter? Though I do not want to cast any aspersion on the Chief Presidency Magistrate, may I know why in this particular case, the Chief Presidency Magistrate was appointed as the Enquiring Officer?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Government do not consider that only Judges of the High Court are judicial officers.

DR. A. SREENIVASAN : ஹார்பர் கலவரத்தில் "டியர்காஸ்" உபயோகிக்கப்பட்டதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். இதில் "டியர் காஸ்" உபயோகித்ததின் முடிவு என்னவாக இருந்தது ? அதன் பின் சுடவேண்டிய நிலைமை என் ஏற்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு வழிகள் ஒன்றும் இல்லாததினால் சுடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

DR. A. SREENIVASAN : முதுகுளத்தூர் கலவரத்தின்போது கலவரம் அதிகமாய் போய்விட்டதினால்தான் "டியர் காஸ்" சரியான முறையில் உபயோகிக்க முடியவில்லை என்று இதற்கு முன்னால் மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஹார்பர் கலவரத்தின்போது "டியர்காஸ்" சரியாக உபயோகித்திருந்தால் சுடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது அல்லவா ?

9th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " டியர்காஸ் " உபயோகித்துப் பார்த்து அதனால் பலன் இல்லை என்று கண்ட பிறகுதான் சுடப்பட்டது.

SRI MOHAMED RAZA KHAN : Sir, is it not a fact that all the excitement was caused because hired labourers were being taken from various places to the Harbour even in the presence of the persons who were on strike and that this sorry episode could not have happened had the Government not resorted to such an avoidable thing?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that no avoidable thing was resorted to.

DR. A. SREENIVASAN : இப்போது நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் இந்த கவர்ண்மெண்டுக்கு இரண்டு ஸ்டாண்டர்டுகள் இருப்பதாகத் தெரிகிறது. கவர்ண்மெண்ட் சம்பந்தப்பட்ட ஸ்ட்ரைக்குகளில் ஒரு விதமாகவும் பிரைவேட் முதலாளிகள் சம்பந்தப்பட்ட ஸ்ட்ரைக்குகளில் வேறொரு விதமாகவும் சர்க்கார் நடந்துகொள்கிறது. இவ்விதம் சர்க்கார் தங்களுக்கு வேண்டிய இடத்தில் ஒரு விதமாகவும் தனிப்பட்ட முதலாளிகள் சம்பந்தப்பட்ட இடத்தில் வேறொரு விதமாகவும் நடந்துகொள்வது என்று இரண்டு ஸ்டாண்டர்டுகள் இருப்பதாகத் தெரிகிறது ? இது உண்மைதானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்திற்கு அவ்விதம் ஒன்றும் கிடையாது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வேண்டுமானால் அந்தவிதமான அபிப்பிராயம் இருக்கலாம்.

DEPUTY CHAIRMAN : Next question.

SRI MOHAMED RAZA KHAN : A few hon. Members want to ask a few more questions, Sir.

DEPUTY CHAIRMAN : All right.

SRI S. T. ADITYAN : ஏற்கெனவே ஸ்ட்ரைக் ஏற்படப்போகிறது என்றும் அதோடு இம்மாதிரிக் கலவரங்களும் ஏற்படும் என்றும் தெரிந்தும், அது சம்பந்தமாக ஆரம்பத்திலிருந்தே இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? 3-10 p.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தமாதிரி ஒரு நிலைமை ஏற்படும் என்று அன்று காலை வரை தெரியாது. அதற்கு முன் தினம் மாலையில் நான் இதைப்பற்றி விசாரணை செய்யும்போது இந்த விதமாக நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று அன்று காலையில் தான் இந்த சம்பவம் ஏற்பட்டது.

SRI S. T. ADITYAN : இந்தியாவிலே மற்றப் பகுதிகளில் இரண்டொரு இடங்களில் இந்தமாதிரியான சம்பவங்கள் நடந்தது சர்க்காருக்குத் தெரியுமல்லவா ? அது எத்தனை நாட்களுக்கு முன்பு தெரியும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றிக் கேட்டால் விவரம் கொடுக்க முடியும். அதை விட்டுப் பொதுவாகக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும் ?

SRI S. T. ADITYAN : மற்ற ஹார்பர்களிலே, கல்கத்தா, பம்பாய் போன்ற ஹார்பர்களிலே, இது போன்ற குமுறல்கள், இடி முழக்கங்கள் இருந்தனவல்லவா ? அது சர்க்காருக்குத் தெரியுமா, தெரியாதா ?

[9th September 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேலை நிறுத்த நோட்டீஸைத் தவிர, வேறு குமுறல் ஒன்றும் இல்லை. நான் இதற்கு முன்பே சொன்னபடி, இந்த ஹார்பர் நிலைமையைப்பற்றி அதற்கு முன் தினம்தான் விசாரித்தேன். அப்போது ஒருவரும் இதை எதிர்பார்க்க வில்லை.

SRI MOHAMED RAZA KHAN : May I know whether it is not a fact that the Government of Madras had blundered completely in allowing hired labour to be taken to the Harbour premises in their buses which itself was the cause for the excitement on the part of the labourers? Could they not have waited for a few more days as it had happened in the case of the Bombay Port and the Calcutta Port?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may again tell the hon. Member that it is his own superior opinion. But the Government do not accept it at all.

DR. A. SREENIVASAN : ஐயா, "பிளாக் லெக்ஸ்" ரெக்ரூட் பண்ணுவது கவர்ண்மெண்ட் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளில் மட்டும் தானு ? பாக்கி கேபிடலிஸ்ட்ஸ், லேபர் டிரபிள்களில் கூட "பிளாக் லெக்ஸ்" ரெக்ரூட் பண்ணுவது லீகல் என்ற அபிப்பிராயம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே "பிளாக் லெக்ஸ்" என்று சொல்லிவிட்டால் போதாது. முக்கியமான சேவைகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். ஹார்பரிலே உணவு தானியங்கள் கப்பல்களில் வந்து காத்துக்கொண்டிருந்தன. அவைகளை இறக்க வேண்டியிருந்தது. தொழிலாளிகள் அவைகளை இறக்கத் தயாராக இல்லாததால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

DR. A. SREENIVASAN : மிலிட்டரி, போலீஸ் இவைகளை வைத்துக்கொண்டு இறக்குமதி செய்வதற்கென்ன ? பாக்கி வேலைகளுக்கெல்லாம் போலீஸையும், ராணுவத்தையும் கவர்ண்மெண்ட் உபயோகிக்கும் போது, இதற்குப் போலீஸையோ அல்லது ராணுவத்தையோ உபயோகித்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை அரசாங்கம் உணருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த வேலையைச் செய்ய மிலிட்டரியை உபயோகிக்கலாம் என்று கனம் அங்கத்தினர் சொல்லும் அபிப்பிராயத்தைக் கேட்டால், அவருக்கு எப்போது இந்த ஞானோதயம் ஏற்பட்டது என்று தெரியவில்லை, அவருக்கு இப்போது புதிய ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

DR. A. SREENIVASAN : கவர்ண்மெண்டுக்குத் தான் ஞானோதயம் ஏற்பட வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எனக்கு ஒன்றும் புதிதாக ஞானோதயம் ஏற்படவில்லை. டில்லியிலே வாட்டர் சப்ளை 'பிரேக்டௌன்' ஏற்பட்டபோது, மிலிட்டரியைக் கொண்டு வந்தது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்தச் சாதாரண விஷயத்தில் மிலிட்டரியை உபயோகிக்கும்போது, 'லேபர் டிரபில்' என்றால் அங்கே மிலிட்டரியை உபயோகிப்பது தப்பான காரியம் என்று எனக்குத் தோன்றவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் அவசியம் என்று கருதுகிற சமயங்களில்தான் மிலிட்டரியை உபயோகிக்கும்.